1987 மே 5]

களுக்கு ஒரு பெரிய சிரமமான வேலையாக இருக்கிறது. காண்ட்ராக்டர்களின் கீழ் அவர்கள் கிட்டத்தட்ட கொத்தடிமைகளைப் போல் வாழ்ந்துகொண்டிருக்கிற அந்தப் பகுதிகளில் யாருக்காவது குடும்ப அட்டைகள் கொடுக்கப்படாமல் இருக்கிறதா என்பதைக் கண்டறிய அதிகாரிகளை விட்டு ஒரு Check-up பரிசோதனை செய்து விவரத்தைச் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த நடைமுறை, அந்தக் கூப்புகளிலே வசிப்பவர்கள் ஒரே இடத்திலே நிரந்தரமாக வசிப்பதில்லையாதலால் காண்ட்ராக்டர்கள் மூலமாக வழங்கி வந்தார்கள். இன்று நேரடியாக நாமே அவர்களுக்கு வழங்கி வருகிறோம். ஆகவே அப்படிப்பட்ட பிரச்சினை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இந்தக் கேள்வியை 30—6—1986 அன்று கொடுத்திருக்கிறார்கள். அதற்கான பதில் துறையிடமிருந்து 20—4—1987 அன்றுதான் வந்து இருக்கிறது. இன்று அவையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்நிய நாட்டு முதலீடுகள் மூலம் தமிழகத்தில் தொழில்கள்

590—(* வினா எண் 3046) திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்நிய நாட்டு முதலீடுகள் மூலம் தமிழகத்தில் தொழில் துவங்க ஏதேனும் விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், என்ன முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சென்னை ஏற்றுமதி வர்த்தக மண்டலத்தில் தொழில்கள் அமைக்க 104 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் 31 விண்ணப்பங்களில் அந்நிய நாட்டு முதலீட்டுடன் தொழில் தொடங்குவதற்கான திட்டங்கள் வழங்கப்

பட்டுள்ளன. சிப்காட் உதவியுடன் அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள் பங்கு பெற்றுள்ள 16 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. மற்றும் இதர 26 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய நாடுகளின் முதலீடுகள் மூலமாக தமிழகத்திலே தொழில்கள் துவங்குவதற்கு அரசினுடைய பங்கு உண்டா? அரசின் பங்கையும் சேர்த்துத்தான் அந்தத் தொழில்கள் துவங்கப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏற்றுமதி வளாகத்தைப் பொறுத்த வரையில் அவர்களே சொந்த மூலதனத்தைக் கொண்டுவருகிறார்கள். ஐ.டி.பி.ஐ.-யினுடைய பங்கு அதிலே இருக்கிறது.

திரு. கடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் பெரும் தொழிலதிபர்கள் எல்லாம் தங்கள் மாவட்டங்களிலேயுள்ள தங்கள் பகுதிகளிலேயே பெருந்தொழில்களைத் துவக்குகிறார்கள். அந்நிய நாடுகளினுடைய முதலீடுகள் மூலமாகத் துவக்கப்படுகிற அந்தத் தொழில்களை, தொழில் மையங்களே இல்லாத பகுதிகளிலே, தொழிற்சாலைகளே இல்லாத பகுதிகளிலே ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து அரசாங்கம் அனுமதித்து அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழில்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான பொருள்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்கள் ஆகும். மத்திய அரசு இந்தியாவிலேயே நான்கே நான்கு இடங்களிலேதான் அந்தத் தொழில்களை அனுமதித்து துவங்கப்பட்டிருக்கிறது. 100 சதவீதம் சாமான்களை உற்பத்தி செய்கிற தொழில்களை எங்கே வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். அதற்கான முன் அனுமதியை அரசிடமிருந்து பெற்றாக வேண்டும்.

1987 மே 5]

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய நாட்டு முதலீடுகள் என்பது இந்தியாவிலே யிருந்து வெளியேறிய வெளிநாட்டிலே குடியிருக்கிற இந்தியர்களாலா அல்லது தமிழர்களால் மட்டுமா அல்லது மற்றவர்களையும் அனுமதிக்கிறார்களா? அது ஒன்று. அடுத்தபடியாக அவர்கள் இங்கே வந்து தொழில் துவங்குகிறபோது அவர்கள் எவ்வளவு மூலதனம் போடுகிறார்கள், தமிழ்நாடு அரசின் மூலதனம் எவ்வளவு? அரசு எவ்வளவு மூலதனம் ஒதுக்கியிருக்கிறது? அரசுக்கு இதனால் கிடைத்திருக்கிற இலாபம் என்ன? அதைப் பற்றிய நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே இருக்கிற இந்தியர்கள் யாராக இருந்தாலும் தொழில்கள் துவங்குவதற்கு—மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்திருக்கிற குழு ஒன்று டெல்லியிலே பணியாற்றுகிறது—அவர்கள் அனுமதி அளிக்கிறார்கள். ஆகவே இந்தியர்களாக இருந்தால் போதும். இன்றைக்கு இருக்கிற நியதி அதுதான். அதோடு அவர்கள் பொருளாதாரம் கொண்டு வந்து விடுகிறார்கள். தொழில் நுட்ப அறிவும் அவர்களே கொண்டு வந்துவிடுகிறார்கள். எல்லாவகையிலும் இது பாராட்டத் தகுந்த திட்டமாக இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் செய்யப்பட்ட பொருள்களை அப்படியே அவர்கள் வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று விடுகிறார்கள். நமக்கு வேலை வாய்ப்பு நிறையக் கிடைக்கிறது. நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணி பெறுவதற்கு அது வசதியாக இருக்கிறது.

(முற்பகல் 10-10)

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய நாட்டு மூலதனத்திலே துவங்கப்படுகிற தொழிலை, தொழிலிலே பின்தங்கியிருக்கிற தர்மபுரி மாவட்டத்திலே—இது போன்ற தொழிலை—துவங்குவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்களா? அப்படிக் கேட்டிருந்தால் என்ன பகுதியிலே என்ன கேட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் ஏதும் தற்போது தமிழக அரசினுடைய கையிலே இல்லை

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைநகருக்குள்ளே அந்நிய நாட்டு முதலாளிகளி னுடைய தொழிலகத்தை உண்டாக்குகிறபொழுது, 100 சதவிதம் உற்பத்தித் திறனை வைத்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிற பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றிலே என்ன, என்ன பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள் என்ற ஒரு பட்டியலைத் தமிழக அரசினுடைய அமைச்சர் தருவாரா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது என்னிடத்திலே பட்டியல் இல்லை. ஆனால் 16 தொழில்கூடங்கள் இன்றைக்கு ஏற்றுமதி வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ரூ. 10 கோடியே 39 இலட்சம் மூலதனத்தில் நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது, வெற்றிகரமாக இருக்கிறது. ஏராளமான பொருள் களை உற்பத்தி செய்து வருகிறார்கள். நான் சென்று பார்த்த வகையில், அங்கே 'ரெடிமேட் கிளாத்' உற்பத்தி செய்து அனுப்பு கிறார்கள்; ஜெம் கட்டிங் என்ற ஒரு பகுதி இருக்கிறது. இன்னொரு பகுதியில், விஞ்ஞான இரசாயனப் பொருளை உற்பத்தி செய்து அனுப்புகிறார்கள், பிளாஸ்டிக் பொருளைச் செய்து அனுப்புகிறார்கள். அதோடு எலெக்டிரானிக் பொருள்களைச் செய்ய, பி. சி. ரெட்டி என்ற ஒருவர் ரூ. 5, 10 கோடி மூலதனம் போட்டு தொழில் ஆரம்பித்திருக்கிறார். ஆகவே, இந்த ஆண்டு ரூ. 100 கோடி ஏற்றுமதி செய்ய முடியும் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள்.

அண்ணா நகர் தொகுதி அரும்பாக்கம் அருகில் கூவம் ஆற்றின் வடிகால் நீர்

591—(*வினா எண் 3832) **திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அண்ணா நகர் தொகுதி அரும்பாக்கம் அருகில் கூவம் ஆற்றில் வடிகால் நீரை விடுவதால் அரும்பாக்கத்தில் அருகிலுள்ள கிணறுகளில் நீர் உபயோகமற்றதாகி வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிக்கு வடிகால் வசதி செய்து தர எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?